**த. நா.ச.பே. எண் : 019** **நாள் : 29.06.2017**

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் இன்று (29.6.2017) சட்டப்பேரவையில், சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் திரு.மு.க. ஸ்டாலின் அவர்கள் தடை செய்யப்பட்ட குட்கா போன்ற போதைப் பொருட்கள் சம்மந்தமாக எழுப்பிய கேள்விக்கு விளக்கம் அளித்தார்.**

---

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

சென்னை காவல் துறை ஆணையர், தனது 22.12.2016 தேதிய கடிதத்தில், அரசால் தடை செய்யப்பட்ட, உடலுக்கு ஊறு விளைவிக்கக் கூடிய மாவா மற்றும் குட்கா போன்ற போதைப் பொருட்களை சமூகவிரோதிகள் சென்னை காவல் துறையைச் சார்ந்த சில அதிகாரிகள் துணையோடு விற்கவும், தயாரிக்கவும், எல்லாப் பகுதிகளுக்கும் அதனை பிரித்து அனுப்புவதாகவும் தகவல் பெறப்பட்டதாக தமிழக அரசின் உள்துறை செயலாளருக்குத் தெரிவித்துள்ளார்.

தமிழ்நாடு அரசு, அக்கடிதத்தினை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு இயக்குநருக்கு மேற்கண்ட குற்றச்சாட்டுகளின் மீது பூர்வாங்க விசாரணை மேற்கொள்ள 23.01.2017 அன்று ஆணையிட்டு, தற்போது ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத் துறையின் விசாரணையில் உள்ளது என்பதை தெரிவித்துக் கொள்கின்றேன்.

இப்பொருள் சம்பந்தமாக திரு. ட்டி.வின்சென்ட் என்பவர் சென்னை உயர் நீதிமன்றத்தில், மத்திய புலனாய்வு பிரிவின் (CBI) விசாரணை கோரி, தாக்கல் செய்த நீதிப் பேராணை எண்.1846/2017, தலைமை நீதிபதி நீதியரசர் சஞ்சய் கிஷன் கவுல் மற்றும் நீதியரசர் எம்.சுந்தர் அமர்வு முன்பு கடந்த 27.1.2017 அன்று விசாரணைக்கு வந்தபோது, காவல் துறை ஆணையாளர் அவர்களே இது குறித்து ஒரு தனிப்பட்ட விசாரணை மேற்கொள்ள வேண்டி நடவடிக்கை கோரியுள்ளார் எனவும்,

“We see no reason why the Court should step into this issue when the authorities are themselves conscious of the gravity of the issue” எனவும், இதில் உயர்நீதிமன்றம் தலையிடத் தேவையில்லை எனக்கூறி, மனுவைத் தள்ளுபடி செய்தது என்பதை இம்மாமன்றத்திற்கு தெரிவித்துக் கொள்கிறேன்.

*****

**வெளியீடு : – இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை–9**